# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறாம் கட்டமாக ஆண்டிப்பட்டியில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **17.04.2026 (வெள்ளிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | ஆண்டிப்பட்டி - (பொதுக்கூட்டம்) | ஆண்டிப்பட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம், |
| மாலை 7 மணி | திண்டுக்கல் - மணிக்கூண்டு (பொதுக்கூட்டம்) | திண்டுக்கல், பழனி, ஆத்தூர், நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நத்தம் |
| **18.04.2026 (சனிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | திருப்பூர் (பொதுக்கூட்டம்) | திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவினாசி, தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் |
| மாலை 7 மணி | மேட்டுப்பாளையம் (பொதுக்கூட்டம்) | மேட்டுப்பாளையம், உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் |
| **19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)** | | |
| மாலை 4 மணி | ஒசூர் (பொதுக்கூட்டம்) | ஒசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி |

**குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 14.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மயிலை தொகுதி கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

## 122வது வட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தீவிரப் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு அறிக்கை!

சென்னை, ஏப். 15-
மயிலாப்பூர் சட்ட மன்ற தொகுதி கழக வேட்பாளரும், மாவட்ட கழக செயலாளருமான மயிலை த.வேலு அறிக்கை வருமாறு:

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, திராவிட முன்னேற்ற கழக வெற்றி வேட்பாளர் த.வேலுவை ஆதரித்து



கழக துணைப் பொது செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், 15.04.2026 இன்று மாலை 5 மணி அளவில் 122 வது வட்டத்தில் உள்ள ஆழ்வார் பேட்டை தெரு, திருவள்ளுவர் சாலை சந்திப்பில் பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

அது சமயம், மயிலாப்பூர் தொகுதி அணைத்து கழக நிர்வாகிகள், மற்றும் அணைத்து கூட்டணி கட்சி தலைவர்கள், மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளபடுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு தெரிவித்துள்ளார்.

### தியாகராயர் நகர் தொகுதி வெற்றி வேட்பாளர்

## ராஜா அன்பழகன் - 134 வது வட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்!

சென்னை ஏப்.15-
சென்னை தென்மேற்கு மாவட்டம்,தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகன் இன்று 134 வது வட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்.

வாக்கு சேகரிக்கும் இடங்கள் வருமாறு; பிரச்சார துவங்கும் இடம் (மாலை 4 மணி) லேக்வியூ ரோடு, ஆஞ்சநேயர் கோயில் அருகில், ஜ‌ப்ளி ரோடு, பிருந்தாவன் தெரு, கணபதி தெரு, உமாபதி தெரு, கிருபாசங்கரி தெரு, சக்ரபாணி தெரு, ஜானகி ராமன் தெரு, பஞ்சாம் தோட்டம், பரோடா தெரு, துரைசாமி மேம்பாலம் அருகில், சத்யபுரி தெரு, கிரி தெரு, வெங்கடாசலம் தெரு, வீராசாமி தெரு ஆகிய தெருக்களில் கழக அரசின் சாதனைகள் எடுத்துக் கூறி வேட்பாளர் ராஜா அன்பழகன் வாக்கு சேகரிக்கிறார்.

இவ்வாறு தியாகராயர் நகர் தேர்தல் பணிக்குழு அறிவித்துள்ளது.



கழக மாற்றுத்திறனாளிகள் அணி சார்பிலான, தொடர் தேர்தல் பரப்புரையின் தொடர்ச்சியாக நேற்று அருப்புக்கோட்டை வெற்றி வேட்பாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரனுக்கு கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்த போது எடுத்த படம்.

### பாசிச பா.ஜ.க.வின் நிழல் கூட தமிழ்நாடு மீது படியாமல்

## இந்த ஸ்டாலின் காப்பான்!

### வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஏப்.15-
இந்திய விடுதலைக்கான முதல் புரட்சி வெடித்த வேலூர் மண், இன்றைய டெல்லி ஆதிக்கத்துக்கு எதிராகவும் தீர்ப்பெழுதும்!

தமிழர்களைச் சொந்த நாட்டில் இரண்டாம்தரக் குடிமக்களாக்க மறுவரையறையைக் கொண்டு வருகிறார்கள்.

இதனை எதிர்ப்பதால், தமிழர்களைப் படிப்பறிவற்றவர்கள் என்கிறார் "பா.ஜ.க. பண்பாளர்" பியுஷ் கோயல் அவர்கள். அவருக்கு நாவடக்கம் தேவை. இல்லையென்றால் தமிழ்நாடு இருமடங்காகத்தான் எதையும் திருப்பித் தரும்!

இப்படிப்பட்டவர்களுக்குச் செலுத்தும் ஒவ்வொரு வாக்கும் தமிழ்நாட்டை நூறாண்டு பின்னோக்கித் தள்ளுவதற்கான வாக்கு!

பாசிச பா.ஜ.க.வின் நிழல் கூட தமிழ்நாடு மீது படியாமல் இந்த ஸ்டாலின் காப்பான்!

**–வலைதளப் பதிவில்**
**முதல்வர் மு.க.ஸ்டாலின்**





சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளரும், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி கே. சேகர்பாபு நேற்று, 56,56அ வட்டத்தில் வாக்கு சேகரித்தார்.
இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்:கே.கவியரசு, எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா. பார்த்திபன், லண்டன் க.முருகன். மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.